மேனிலை இரண்டாம் ஆண்டு
கணக்குப்பதிவியல்
மாதிரி வினாத்தாள் – 2

நேரம் : 2.30 மணி　　　　　　　　　　　　　　　　　　　　　　　　　மொத்த மதிப்பெண்கள்: 90

பிரிவு – I

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**　　　　　　　　　　　　　　　　　　　　(20 X 1=20)

1. 31.12.2005 அன்றைய இருப்பாய்வின்படி பற்பல கடனாளிகள் ₹ 75000 ஆகும். சரிக்கட்டுதலின்படி போக்கெழுதப்பட வேண்டிய வாராக்கடன் ₹ 5000 எனில் 5 %வீதம் வாரா ஐயக் கடன் ஒதுக்கு – – – – – – – ஆகும்.

   (அ) ₹ 3750　　　　(ஆ) ₹ 4000　　　　(இ) ₹ 3500

2. எடுப்பு மீதான வட்டி கழிக்கப்படுவது__________

   (அ) வருமானத்திலிருந்து　　　　(ஆ) முதலிலிருந்து　　　　(இ) செலவிலிருந்து

3. 01.04.2014 இருப்பாய்வில் வங்கிக்கடன் ₹ 7,00,000. வட்டி வீதம் ஆண்டுக்கு 10 % . வட்டி செலுத்தியது ₹ 50,000 . 31.3.2015 அன்று நிலுவையிலுள்ள வட்டி ₹ ____

   (அ) ₹ 20,000　　　　(ஆ) ₹ 70,000　　　　(இ) ₹ 50,000

4. 2004 ஏப்ரல் 1 அன்று பற்பல கடனாளிகள் ரூ. 39,600 மற்றும் 2005 மார்ச் 31இல் பற்பல கடனாளிகள் ரூ. 49,900. அவ்வாண்டில் பற்பல கடனாளிகளிடம் இருந்து பெற்ற ரொக்கம் ரூ.69,500 எனில் அவ்வாண்டின் கடன் விற்பனை––––––.

   (அ) ₹ 20,000　　　　(ஆ) ₹ 59,200　　　　(இ) ₹ 79,800

5. முழுமைபெற்ற பதிவேடுகளைப் பயன்படுத்தும் நிறுவனம் –––––.

   (அ) சிறு வியாபாரிகள்　　　　(ஆ) அரசு　　　　(இ) நிறுமங்கள்

6. குறைந்த செல் மதிப்பு முறையில் தேய்மானம் ––––––

   (அ) ஆண்டுதோறும் அதிகமாகும்　　　　(ஆ) ஆண்டுதோறும் நிலையாக இருக்கும்

   (இ) ஆண்டுதோறும் குறையும்

7. ₹ 2,00,000 மதிப்புள்ள ஒரு சொத்தின் மீது ஆண்டுக்கு 10 % வீதம் நேர்க்கோட்டு முறையில் தேய்மானம் நீக்கப்படுகிறது. மூன்றாம் ஆண்டு இறுதியில் அச்சொத்தின் ஏட்டு மதிப்பு

   (அ) ₹ 1,40,000　　　　(ஆ) ₹ 1,60,000　　　　(இ) ₹ 1,80,000

8. நேர்க்கோட்டு முறையில் தேய்மானம் கணக்கிடப்படுவது ------.

(அ) தொடக்க மதிப்பு (ஆ) ஏட்டு மதிப்பு (இ) தொடக்க மதிப்பு – இறுதி மதிப்பு

9. மொத்த இலாப விகிதத்தில் உள்ள உறவு முறை -----.

(அ) மொத்த இலாபம் மற்றும் மொத்த விற்பனை.

(ஆ) மொத்த இலாபம் மற்றும் கடன் விற்பனை

(இ) மொத்த இலாபம் மற்றும் ரொக்க விற்பனை.

10. அனைத்து வகையுடைமை விகிதங்களும் ----ஆல் கொடுக்கப்படும்.

(அ) விகிதாச்சாரம் (ஆ) மடங்கு (இ) சதவீதம்.

11. விற்ற பொருளின் அடக்க விலை ₹ 4,00,000. சராசரி சரக்கிருப்பு ₹ 80,000. சரக்கிருப்பு விற்பனை விகிதம் ------ ஆகும்.

(அ) 5 மடங்கு (ஆ) 4 மடங்கு (இ) 7 மடங்கு

12. திட்டப்பட்டியல் என்பது----- காலத்திற்கான மதிப்பீடு ஆகும்.

(அ) எதிர் (ஆ) நிகழ் (இ) கடந்த

13. ஜனவரியில் தொடக்க ரொக்க இருப்பு ₹ 15,000. எதிர்ப்பார்க்கும் பெறுதல்கள் ₹ 20,000. எதிர்பார்க்கும் செலவுகள் ₹ 10,000. பிப்ரவரி மாதத்திற்கான தொடக்க இருப்பு -----.

(அ) ₹ 25,000 (ஆ) ₹ 35,000 (இ) ₹ 45,000

14. கூட்டாண்மை உடன்பாடு இல்லாத பொழுது கூட்டாளிகளுக்கு-----

(அ) ஊதியம் அளிக்கப்படும் (ஆ) ஊதியம் அளிக்கப்படமாட்டாது

(இ) நிறுவனத்திற்காக உழைத்தவர்களுக்குச் சம்பளம் அளிக்கப்படும்.

15. மாறுபடும் முதல் முறையில் கூட்டாளிகளின் இலாபம் அவர்களின் ----- கணக்குகளுக்கு மாற்றப்படுகிறது.

(அ) நடப்பு (ஆ) எடுப்பு (இ) முதல்

16. சாதாரண இலாபத்தை விடக் கூடுதலாக பெறக்கூடிய சராசரி இலாபமே ----- எனப்படுகிறது.

(அ) உயர் இலாபம் (ஆ) நற்பெயர் (இ) பகிர்ந்து தரா இலாபம்

17. சேர்க்கையில் மறுமதிப்பீட்டின் இலாபத்தை பழைய கூட்டாளிகளின் முதல் கணக்குகளில் மாற்றப்படுவது---------.

(அ) பழைய இலாபப் பகிர்வு விகிதத்தில் (ஆ) தியாக விகிதத்தில்

(இ) புதிய இலாபப் பகிர்வு விகிதத்தில்.

18. A,B,C என்ற கூட்டாளிகளின் பழைய இலாபப் பகிர்வு விகிதம் 4:3:2 . C கூட்டாண்மையிலிருந்து விலகுகிறார். A, B இன் புதிய இலாப பகிர்வு வீதம் ------ ஆகும்.

(அ) 4:3 (ஆ) 3:2 (இ) 4:2

19. ஒறுப்பிழப்புக் கணக்கில் வரவு வைக்கப்பட்ட தொகை ₹ 500. ஒறுப்பிழப்பு செய்த பங்குகளை மறுவெளியீடு செய்த வகையில் நட்டம் ₹ 200 எனில் முதலினக் காப்பு ------

(அ) ₹ 200 (ஆ) ₹ 300 (இ) ₹ 500

20. நிறுமச் (திருத்தப்பட்ட) சட்டம் 2000இன் படி பங்குகளால் வரையறுக்கப்பட்ட நிறுமம் ------ வகையான பங்குகளை மட்டும் வெளியிடும்.

(அ) 1 (ஆ) 2 (இ) 3

## பிரிவு – II

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.

அவற்றில் வினா எண் 21 க்குக் கண்டிப்பாக விடையளிக்கவும். (7x2=14)

21. முன்கூட்டிச் செலுத்திய செலவு என்றால் என்ன ?

22. நிகர மதிப்பு முறை என்றால் என்ன ?

23. விற்ற சொத்தின் மீதான இலாபம் அல்லது நட்டம் எவ்வாறு கணக்கிடப்படும்.

24. ஒரு நிறுவனத்தின் நடப்பு விகிதம் 2:1 .அந்நிறுவனத்தின் நிலுவைகளைச் செலுத்தும் திறனை அளவிட்டு விளக்கம் தருக.

25. ரொக்கத் திட்டப்பட்டியல் தயாரிப்பதில் உள்ள நிலைகளை விளக்குக.

26. நிலை முதல் முறையில் முதற்கணக்கு மாறுபடும் ஏதேனும் இரண்டு சூழ்நிலைகளைக் கூறுக.

27. கூட்டாண்மை உடன்பாட்டில் கூட்டாளிகளின் கடன் மீதான வட்டிக்கு, வட்டி விகிதம் குறிப்பிடவில்லை எனில் கடன் மீதான வட்டி வழக்கப்படுமா ? விளக்கம் தருக.

28. மறுமதிப்பிட்டுக் கணக்கில் கடனீந்தோரின் தொகை கூடும்பொழுது, அத்தொகை மறுமதிப்பிடு கணக்கில் வரவு வைக்கப்படுமா அல்லது பற்று வைக்கப்படுமா ? விளக்கம் தருக .

29. மிகை ஒப்பம் மற்றும் குறை ஒப்பம் – விளக்கம் தருக

30. அழைப்பு நிலுவை – விளக்கம் தருக.

## பிரிவு III

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 31 க்கு கட்டாயமாக விடையளிக்கவும். (7x3=21)

31. எடுப்பு மீதான வட்டி ₹ 2000 குறித்துச் சரிக்கட்டுப் பதிவு மற்றும் மாற்றுப்பதிவு தருக.

32. கீழ்க்காணும் விவரங்களைக் கொண்டு கடன் விற்பனையைக் கணக்கிடுக.

| | |
|---|---|
| பற்பல கடனாளிகள் ( தொடக்கம் ) | ₹ 50,000 |
| பற்பல கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | ₹ 80000 |
| பற்பல கடனாளிகளுக்கு அளித்த தள்ளுபடி | ₹ 2000 |
| விற்பனைத் திருப்பம் | ₹ 5000 |
| பற்பல கடனாளிகள் ( இறுதி ) | ₹ 75000 |

33. 1.4.2002 அன்று ₹ 75000 மதிப்புள்ள இயந்திரம் வாங்கப்பட்டது. மூன்று ஆண்டுகள் பயன்படுத்திய பின் அது ₹ 35000 விற்கப்பட்டது. ஆண்டுக்கு 10% வீதம் குறைந்த செல் இருப்பு முறையில் தேய்மானம் நீக்கப்பட வேண்டும். கணக்கேடுகள் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 31 இல் முடிக்கப் பெறுகின்றன. விற்ற இயந்திரம் மீதான இலாபம் அல்லது நட்டம் கணக்கிடுக.

34. புற அகப் பொறுப்புகள் வீதம் கணக்கிடுக.

| | |
|---|---|
| சாதாரணப் பங்கு முதல் | ₹ 1,00,000 |
| கடனீட்டுப் பத்திரம் | ₹ 75,000 |
| கொடுபட வேண்டிய செலவுகள் | ₹ 10,000 |
| காப்பும் மிகுதியும் | ₹ 75,000 |
| பற்பல கடனீந்தோர் | ₹ 40,000 |

35. ரொக்கத் திட்டப்பட்டியலின் நன்மைகள் யாவை ?

36. 1.2.2000 அன்று X, Y எனும் கூட்டாளிகளின் முதல், முறையே ₹ 80,000, ₹ 40,000 ஆகும். 30.06.2000 அன்று X என்பவர் கூடுதல் முதலாக ₹ 10,000 வைத்தார். Y என்பவர் 1.10.2000 அன்று ₹ 5000 திரும்ப எடுத்துக்கொண்டார். 2000 ஆம் ஆண்டின் முதல் மீதான வட்டி 5 % கணக்கிடுக.

37. தியாக விகிதத்திற்கும், ஆதாய விகிதத்திற்குமிடையே உள்ள வேறுபாடுகள் யாவை ? (எவையேனும் 3)

38. M, N, U என்று கூட்டாளிகள் முறையே 4:3:3 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். "U" என்பவர் விலகிய பிறகு அவரின் பங்கை M,N இருவரும் 3:2 என்னும் விகிதத்தில் எடுத்துக்கொண்டனர். புதிய இலாபப் பகிர்வு வீதம் யாது ?

39. ராஜா வரையறு நிறுமம் ₹ 100 வீதம் 500 பங்குகளை ₹ 10 தள்ளுபடியில் வெளியிட்டது. குறிப்பேட்டுப் பதிவினைத் தருக.

40. பீட்டா வரையறு நிறுமம் 1.1.2016 அன்று பங்கொன்று ₹ 10 வீதம் 50,000 பங்குகளை விண்ணப்பத்தின் பொழுது ₹ 2 செலுத்தும் வகையில் வெளியிட்டது. நிறுமம் 1,20,000 பங்குகள் மீது விண்ணப்பம் பெற்றது. மிகுதியான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுத் தொகை திருப்பப்பட்டது. தேவையான பதிவுகளைத் தருக.

பிரிவு–IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்

(7x5=35)

41. (அ) 31.03.2002 அன்று திரு. கிஷோரின் ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட இருப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

| பற்று இருப்புகள் (₹) | | வரவு இருப்புகள் (₹) | |
|---|---|---|---|
| எடுப்பு | 40,000 | முதல் | 2,00,000 |
| கைரொக்கம் | 17,000 | விற்பனை | 1,60,000 |
| வங்கி ரொக்கம் | 65,000 | பற்பல கடனீந்தோர் | 45,000 |
| கூலி | 10,000 | | |
| கொள்முதல் | 20,000 | | |
| சரக்கிருப்பு (1.04.2001) | 60,000 | | |
| கட்டடம் | 1,00,000 | | |
| பற்பல கடனாளிகள் | 44,000 | | |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுகள் | 29,000 | | |
| வாடகை | 4,500 | | |
| கழிவு | 2,500 | | |
| பொதுச் செலவுகள் | 8,000 | | |
| அறைகலன் | 5,000 | | |
| | 4,05,000 | | 4,05,000 |

சரிகட்டுதல்கள் :

1. இறுதிச் சரக்கிருப்பு ₹ 40,000
2. முதல் மீது வட்டி 6% அனுமதிக்கவும்
3. எடுப்பு மீது வட்டி 5 % அனுமதிக்கவும்
4. கொடுபட வேண்டிய கூலி ₹ 1000
5. முன் கூட்டி செலுத்திய வாடகை ₹ 900

2002 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார, இலாப நட்ட கணக்கைத் தயாரிக்கவும்.

(அல்லது)

(ஆ) D, J என்ற கூட்டாளிகள் முறையே 3:2 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். அவர்கள் விஜயன் என்பவரை 1/5 பங்குக்குக் கூட்டாளியாகச் சேர்க்க முடிவு செய்தனர். நற்பெயர் ₹ 50,000 ஆக தற்பொழுது மதிப்பிடப்பட்டுள்ளது.

கீழ்க்காணும் தருணங்களில் குறிப்பேட்டுப் பதிவுகளைத் தருக.

(அ) நற்பெயர் இதுவரை நிறுவன ஏடுகளில் இல்லாமலிருந்தால்

(ஆ) ஏடுகளில் நற்பெயரின் மதிப்பு ₹ 30,000 எனக் காட்டப்பட்டிருந்தால்
(இ)ஏடுகளில் நற்பெயரின் மதிப்பு ₹ 60,000 எனக் காட்டப்பட்டிருந்தால்

42) ஒற்றைப் பதிவு முறையில் கணக்கேடுகளைப் பராமரித்து வரும் திரு பரணீதரனின் இருப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

| விவரம் | ஏப்ரல் 1 2000 (₹) | மார்ச் 31 2001 (₹) |
|---|---|---|
| அறைகலன் | 4000 | 4000 |
| சரக்கிருப்பு | 10000 | 12000 |
| பற்பல கடனாளிகள் | 12000 | 40000 |
| ரொக்கம் | 20000 | 40000 |
| பற்பல கடனீந்தோர் | 4000 | 7000 |
| பெறுதற்குரிய மாற்றுச் சீட்டுகள் | 2000 | 1000 |
| கடன் (ப) | – | 1000 |
| முதலீடுகள் | – | 4000 |

அவ்வாண்டில் அவரது எடுப்பு ₹ 4000. அறைகலன் மீது 10% தேய்மானம் அனுமதிக்க. பற்பல கடனாளிகள் மீது 5% வாரா ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்குக.

2000 – 2001 ஆண்டிற்கான இலாபம் கண்டறியும் அறிக்கை தயார் செய்க.

(அல்லது)

(ஆ) A,B என்ற கூட்டாளிகள் 6:4 என்னும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். 2000 ஜனவரி 1 அன்று C என்பவரை 1/3 பங்குக்குச் சேர்த்துக் கொண்டனர். பின்வரும் நிபந்தனைகளுக்கு ஒப்புக் கொண்டனர்.

(அ) C என்பவர் ₹ 25000 முதல் கொண்டு வரவேண்டும்

(ஆ) நற்பெயர் ₹ 26000 என மதிப்பிடப்படும்.

(இ) நிலம், கட்டடம் 40% மதிப்பேற்றம் செய்யப்படும்.

(ஈ) பொறியும் பொறித்தொகுதியின் மீதும், 10% தேய்மானம் நீக்கப்படும்

(உ) ஐயக்கடன் ஒதுக்கு ₹ 800 அதிகரிக்கப்படும்.

(ஊ) பற்பல கடனீந்தோரில் ₹ 1000 போக்கெழுத்தப்படும்.

C யின் சேர்ப்புக்கு முந்தைய 31.12.1999 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்புப் பின்வருமாறு.

| பொறுப்புக்கள் | | ₹ | சொத்துக்கள் | | ₹ |
|---|---|---|---|---|---|
| பற்பல கடனீந்தோர் | | 29000 | ரொக்கம் | | 9000 |
| செலுத்தற்குறிய மாற்றுச் சீட்டு | | 6000 | நிலமும், கட்டடமும் | | 25000 |
| முதல் | | | பொறி பொறித்தொகுதி | | 30000 |
| A | 50000 | | சரக்கிருப்பு | | 15000 |
| B | 35000 | 85000 | | | |
| பொதுக்காப்பு | | 16000 | பற்பல கடனாளிகள் | 20000 | |
| | | | கழிக்க | | |
| | | | ஐயக்கடன் ஒதுக்கு | 1000 | 19000 |
| | | | நற்பெயர் | | 10000 |
| | | | இலாப நட்ட க/கு | | 28000 |
| | | 1,36,000 | | | 1,36,000 |

மறுமதிப்பீட்டுக் கணக்கு கூட்டாளிகளின் முதல் கணக்குகள், ஆகியவற்றைக் காட்டுக.

43. (அ) திருமதி பிரமீளா தனது கணக்கேடுகளை ஒற்றைப் பதிவு முறையில் வைத்திருக்கிறாா். கீழ்க்காணும் தகவல்களைக் கொண்டு 2003 மாா்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும், ஆண்டுக்குரிய வியாபாரக் கணக்கு இலாபநட்டக் கணக்கு மற்றும் அந்நாளைய இருப்பு நிலைக் குறிப்பு தயாா் செய்க.

இயந்திரம் மீது 10%தேய்மானம் விலக்கப்பட்ட வேண்டும்.

| ரொக்க ஏடு | | | |
|---|---|---|---|
| பெறுதல்கள் | தொகை ₹ | செலுத்தல்கள் | தொகை ₹ |
| இருப்பு கீ/கொ | 16,000 | (ரொக்க) கொள்முதல் | 28000 |
| (ரொக்க) விற்பனை | 80,000 | பற்பல கடனீந்தோர் | 40,000 |
| பற்பல கடனாளிகள் | 60,000 | பொதுச் செலவுகள் | 12,000 |
| | | கூலி | 4000 |
| | | எடுப்புகள் | 16000 |
| | | இருப்பு கீ/இ | 56000 |
| | 1,56,000 | | 1,56,000 |

பிற தகவல்கள்

| விவரம் | 31.03.2002 (₹ ) | 31.03.2003 (₹ ) |
|---|---|---|
| பற்பல கடனாளிகள் | 18000 | ? |
| பற்பல கடனீந்தோர் | 28800 | ? |
| சரக்கிருப்பு | 20000 | 32000 |
| இயந்திரம் | 80000 | 80000 |
| அறைகலன் | 6000 | 6000 |

| கூடுதல் தகவல்கள் | ₹ |
|---|---|
| அளித்த தள்ளுபடி | 2800 |

| | |
|---|---|
| பெற்ற தள்ளுபடி | 3400 |
| கடன் விற்பனை | 68800 |
| கடன் கொள்முதல் | 28200 |

(அல்லது)

(ஆ) X, Y, Z என்ற கூட்டாளிகள் முதல் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். 31.12.1994 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்புப் பின்வருமாறு.

| பொறுப்புகள் | | | சொத்துக்கள் | | |
|---|---|---|---|---|---|
| பற்பல கடனீந்தோர் | | 10,500 | வங்கி | | 8,000 |
| காப்பு நிதி | | 24,000 | பற்பல கடனாளிகள் | 10,000 | |
| முதல் கணக்குகள் | | | | | |
| | 45,000 | | கழிக்க | | |
| | 30,000 | | ஐயக்கடன் ஒதுக்கு | 500 | 9,500 |
| | 15,000 | 90,000 | சரக்கிருப்பு | | 9,000 |
| | | | இயந்திரம் | | 24,000 |
| | | | நிலமும், கட்டிடமும் | | 38,000 |
| | | | நற்பெயர் | | 24,000 |
| | | | இலாப நட்ட க/கு | | 12,000 |
| | | 1,24,500 | | | 1,24,500 |

பின்வரும் இனங்களைக் கருத்தில்கொண்டு 1.1.1995 அன்று Z நிறுவனத்திலிருந்து விலகினார்.

(அ) நிறுவனத்தின் நற்பெயர் ₹ 18000 என மதிப்பிட்டது.

(ஆ) ஐயக்கடன் ஒதுக்கு ₹ 300 குறைக்கப்பட்டது.

(இ) முழுவதும் இலாப நட்டக் கணக்கில் பற்று செய்யப்பட்ட காப்பீட்டுத் தொகை ₹ 1000 முன் கூட்டிச் செலுத்திய கணக்கிற்கு மாற்றப்பட்டது.

(ஈ) இயந்திரம் மீது 5% தேய்மானம் நீக்கப்பட்டது.

(உ) கொடுபடா பழுதுபார்ப்புச் செலவுக்கு ₹ 1100 ஒதுக்கீடு செய்யப்பட்டது.

(ஊ) Z என்பவருக்கு ₹ 5000 செலுத்தப்பட்டது மீதி அவரின் கடன் கணக்கிற்கு மாற்றப்பட்டது. மறுமதிப்பீட்டுக் கணக்கு, முதல் கணக்குகள் தயார் செய்க.

44. (அ) பின்வரும் விவரங்களைக் கொண்டு இலாபத்தன்மை விகிதங்கள் கணக்கிடுக.

2004 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார இலாப நட்டக் கணக்கு

| விவரங்கள் | | விவரங்கள் | |
|---|---|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 1,99,000 | விற்பனை | 17,00,000 |
| கொள்முதல் | 11,19,000 | இறுதி சரக்கிருப்பு | 2,98,000 |
| மொத்த இலாபம் | 6,80,000 | | |
| | 19,98,000 | | 19,98,000 |
| நிர்வாகச் செலவினங்கள் | 3,00,000 | மொத்த இலாபம் | 6,80,000 |
| விற்பனைச் செலவினங்கள் | 60,000 | வட்டி பெற்றது | 18,000 |
| நிதிசார் செலவினங்கள் | 30,000 | | |
| இயந்திரம் விற்றதில் ஏற்பட்ட நட்டம் | 8,000 | | |
| நிகர இலாபம் | 3,00,000 | | |
| | 6,98,000 | | 6,98,000 |

(அல்லது)

(ஆ) ஆஷா வரையறு நிறுமம் பங்கொன்று ₹ 100 மதிப்புடைய ₹ 10,000 நேர்மை பங்குகளை ₹ 10 தள்ளுபடியில் வெளியிட்டது. தள்ளுபடி ஒதுக்கீட்டின் பொழுது அனுமதிக்கப்படும்.

இதற்கான தொகை பின்வருமாறு செலுத்தப்பட வேண்டும்.

விண்ணப்பத்தின் போது ₹ 30

ஒதுக்கீட்டின் போது ₹ 30

பங்கு முதல் மற்றும் இறுதி அழைப்பின் போது ₹ 30

பொது மக்களிடமிருந்து ₹ 9,000 பங்குகளுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டன. 400 பங்குகள் மீதான முதல் மற்றும் இறுதி அழைப்புத் தொகை தவிர, ஏனைய பங்குகள் மீது பெற வேண்டிய அனைத்துத் தொகையும் முறையே பெறப்பட்டது. பின்னர் இவை ஒறுப்பிழப்பு செய்யப்பட்டன. இவற்றில் 200 பங்குகள் முழுவதும் செலுத்தப்பட்டவைகளாக பங்கொன்று ₹ 80 வீதம் மறுவெளியீடு செய்யப்பட்டது. நிறுமத்தின் ஏட்டில் மேற்கண்ட நடவடிக்கைகளுக்கு குறிப்பேட்டுப் பதிவுகள் தருக.

45. (அ) திரு கிஷோர் அவர்களின் 31.03.2005 அன்றைய இருப்பிலிருந்து எடுக்கப்பட்ட இருப்பு விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| விவரம் | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|
| பற்பல கடனாளிகள் | 65000 | |
| வாராக்கடன் | 2500 | |
| வாரா ஐயக்கடன் ஒதுக்கு | – | 1500 |

சரிக்கட்டுகள் :

(அ) வாராக்கடன் ₹ 1500 கூடுதலாகப் போக்கெழுதுக.

(ஆ) கடனாளிகள் மீது 3 % வாரா ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்குக.

சரிக்கட்டுப் பதிவுகள் தந்து இவை இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டுக.

(அல்லது)

(ஆ) ஒரு நிறுமம் முதல் அழைப்புத்தொகை பங்கு ஒன்றுக்கு ₹ 3 பெறப்படாததால் ₹ 10 மதிப்புள்ள 400 பங்குகளை ஒறுப்பிழப்பு செய்தது. இறுதி அழைப்பு ₹ 2 இன்னும் அழைக்கப்படவில்லை. இப்பங்குகள் பின்னர் பங்கு ஒன்றுக்கு 7 வீதம், 8 செலுத்தப்பட்ட பங்குகளாக மறுவெளியீடு செய்யப்பட்டது. தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தந்து, பங்கு ஒறுப்பிழப்புக் கணக்கு மற்றும் முதலினக் காப்புக் கணக்கு தயார் செய்க.

46. (அ) பின்வரும் விவரங்களிலிருந்து 2003 அக்டோபர் மாதத்தில் தொடங்கி மூன்று மாதங்களுக்கான ரொக்கத் திட்டப்பட்டியலைத் தயாரிக்க.

அக்டோபர் மாதத்தின் தொடக்க ரொக்க இருப்பு . ₹ 6000

ரொக்க விற்பனைஅக்டோபர் ₹ 50,000 , நவம்பர் ₹ 40000, டிசம்பர் ₹ 30000 .

கடன் கொள்முதல் ,

செப்டம்பர் : ₹ 20,000

அக்டோபர் : ₹ 24,000

நவம்பர்: ₹ 28,000

டிசம்பர் : ₹ 32,000

சரக்களித்தோர் அனுமதித்த கடனின் காலம் ஒரு மாதம் ஆகும்.

iv ) டிசம்பரில் பெற வேண்டிய பங்காதாயம் ₹ 8000

V ) அக்டோபரில் முன்கூட்டி செலுத்த வேண்டிய வருமான வரி ₹ 6000

VI ) நவம்பர் மாதத்தில் விற்ற சொத்தின் மதிப்பு ரூ. 24,000

(அல்லது)

(ஆ) ஏப்ரல் 1, 2001 அன்று எக்ஸெஸ் வரையறு நிறுமம் ₹ 56000 மதிப்புள்ள இயந்திரம் ஒன்றை வாங்கியது. இயந்திரத்தின் பயனளிப்புக் காலம் 10 ஆண்டுகள். அதன் இறுதி மதிப்பு ₹ 6000. ஆண்டுதோறும் தேய்மானம் நேர்க்கோட்டு முறையில் நீக்கப்பட்டது. ஆண்டுதோறும் கணக்கேடுகள் மார்ச் 31 அன்று முடிக்கப் பெறுகின்றன. இயந்திரம் கணக்கு மற்றும் தேய்மானம் கணக்கு மூன்று ஆண்டுகளுக்குத் தயார் செய்க.

47. (அ) அமர் அக்பர் எனும் கூட்டாளிகள் முறையே 3 : 2 எனும் விகிதத்தில் இலாப நட்டங்கள் பகிர்ந்து வந்தனர். 1.4.2004 அன்றைய அவர்களுடைய முதல் முறையே ₹ 1,50,000 ,₹ 1,00,000 ஆகும். கூட்டாண்மை ஒப்பாவணம் கீழ்க்காண்பனவற்றிற்கு வகைசெய்கிறது. சரிகட்டுதல்களுக்கு முன் 2005 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டின் நிகர இலாபம் ₹ 70,000. அந்த ஆண்டின் எடுப்புகள் முறையே அமர் ₹ 15,000. அக்பர் ₹ 10,000 ஆகும்.

1. முதல் மீது வட்டி ஆண்டுக்கு 6%

2. எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 8 % வட்டி அமர் 600 அக்பர் ₹ 400

3. அமர் , அக்பர் இருவரும் முறையே ₹ 10,000 ஊதியம் பெறுகின்றனர்.

அமர் ₹ 3600 கழிவு பெறுகிறார்.

இலாப நட்டப் பகிர்வுக் கணக்கையும், கூட்டாளிகளின் முதல் கணக்குகளையும் காட்டுக.

(அல்லது)

(ஆ) 1.10.2000 அன்று ஒரு நிறுமம் ₹ 6,00,000 மதிப்புள்ள இயந்திரத்தை வாங்கியது. நிறுவுகைச் செலவுகளாக ₹ 40,000 செலவழிக்கப்பட்டது. நிறுவனம் ஆண்டு தோறும் தேய்மானம் 20% குறைந்த செல் இருப்பு முறையில் நீக்கியது. ஒவ்வொரு ஆண்டும் கணக்கேடுகள் மார்ச் 31 அன்று முடிக்கப் பெறுகின்றன.

இயந்திரக் கணக்கையும் தேய்மானக் கணக்கையும் மூன்று ஆண்டுகளுக்குத் தயார் செய்க.